**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 409/2007**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 03.03.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : தங்கராஜ் Father's Name : பெரியசாமி

துவக்க நேரம்: 04.44 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>**1** வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1) வழக்கு தாக்கல் செய்யும்பொழுது ஏக்.3.00 நிலத்திற்கு பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆமாம். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது கடந்த 25.02.2008 தேதியன்று வழக்கு சொத்தில் ஏக்.0.34-1/4 செண்ட் நிலத்தை தானசெட்டில்மெண்ட் மூலம் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்துள்ளேன் என்றால் பத்திரம் எழுதியது உண்மைதான். வட்டார வளர்ச்சி அலுவலர் மோசடியாக நிலத்தை பைசல் மூலம் வாங்கிக்கொண்டார்.

2) BDO என்னை மோசடி செய்து நிலத்தை வாங்கிகொண்டார் என்று காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தேன். மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனு நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடமிருந்து மோசடியாக தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவாங்கவில்லை என்றாலும்

நேர்மையாகதான் என்னிடம் பொது நலன் கருதி பெறப்பட்டது என்றாலும் நான் விருப்பபட்டுதான் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக மோசடியாக பெறப்பட்டதாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கடந்த 2018-ம் ஆண்டு வழக்கு சொத்திலிருந்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஏக்.0.34-1/4 செண்ட் இடத்தை வழக்கிலிருந்து நீக்கிவிட்டேன் என்றால் ஆமாம். இதற்கு முன்பிருந்து எனது வழக்கறிஞர் தவறுதலாக என்னை கேட்காமல் நீக்கிவிட்டார்.

3) எனது வழக்கறிஞர் என்னை கேட்காமல் ஏக்.0.34-1/4 இடத்தை நீக்கிவிட்டதாக சொல்லி நீக்கிய இந்த சொத்தை பொறுத்து மீண்டும் இந்த வழக்கில் சேர்க்க சொல்லி இதுநாள்வரை எவ்வித நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன். நான் எவ்விதமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) 1ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த தானாசென்டில்மெண்ட்யில் உள்ள ஏக்கர் 0.34 1/4 நிலம் வழக்கு சொத்தாக குறிப்பிடாதக்காரணத்தால், மேற்படி சொத்து குறித்து எந்தவொர பரிகாரமும் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்கூறிய ஏக்கர் 0.34 1/4 ஆனது ஏக்கர் 3 நிலத்தின் நடுவில் செல்கிறது என்றால் ஓரமாகதான் செல்கிறது. ஏக்கர்க 0.34 1/4 ஆனது எனக்கு உரிமையானது என்பதற்கு ஆதரமாக நான் நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த சொத்து எனக்கு உரிமையானதில்லை. என்னுடைய பாட்டன் மற்றும் பாட்டி சம்பாதித்த சொத்திலிருந்துதான் வாங்கப்பட்டது. இந்த சொத்தை நான் தானா சென்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க உரிமையில்லை.

5) என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும், என்னுடைய தரப்பு வாதுரையிலும் மேற்கூறிய ஏக்கர் 0.34 1/4 சொத்து என்னுடைய பாட்டன் மற்றும் பாட்டி சம்பாதித்த சொத்து என்றும், அதை தானாசெண்டில்மெண்ட் கொடுக்க உரிமையில்லை என்ற விவரத்தை நான் கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு உரிமையில்லாத சொத்தை குறித்து எனக்கு பரிகாரம் கோர உரிமை இல்லையென்றால் சரியல்ல. என்பெயரில்தான் பட்டா உள்ளது.

6) தானாசெண்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தவுடனே சொத்தின் சுவாதீனத்தை 1ம் பிரதிவாதியின் அனுபவத்திற்கு சுவாதீனம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. தற்பொழுது வரை ஏக்கர் 0.34 1/4 நிலத்தினை குறித்து அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் கோராதக்காரணத்தால், இந்த ஏக்கர் 0.34 1/4 நிலத்தை குறித்து, நான் எந்தவொரு பரிகாரமும் கோர உரிமையுடைய நபர் அல்ல என்றால் சரியல்ல.

7) நான் தாக்கல் செய்துள்ள ஆவண எண்கள் 7 முதல் 12 வரை அனைத்தும் வழக்கு தாக்கல் செய்தற்கு பின்னிட்டு, உருவாக்கப்பட்ட காரணத்தால் மேற்படி ஆவணங்களை சாட்சியாக ஏற்கமுடியாது என்றால் சரியல்ல. ஏக்கர் 0.34 1/4 நிலத்தில், 1ம் பிரதிவாதி எந்தவொரு பாதையும் அமைக்கக்கூடாது என்று கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

8) தாவா சொத்து என்னுடைய சுவாதீனத்தில் இருப்பதற்கான அடங்கல் கணக்கை நான் வழக்கு தாக்கல் செய்யும்பொழுது, வழக்குடன் இணைத்து தாக்கல் செய்யவில்லை என்றால் கோர்ட்டில் கொடுத்துள்ளேன். தானாசெண்டில்மெண்ட் யை முழுமனதுடன் எழுதிக்கொடுத்துவிட்டு, தற்பொழுது அந்தயிடத்தில் பாதை அமைப்பதற்கு எதிர்ப்பு

தெரிவித்து வருகிறேன் என்றாலும், என்னுடைய எதிர்ப்பு சட்ட முரணானது என்றாலும் சரியல்ல. எனவே, நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 05.17 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal District Munsif, Attur.

O.S. No. 409/2007, Dt. 03.03.2025.